செ.கு.எண் : 357

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 4.10.2012

மதுரை மாநகர காவல், கீரைத்துரை காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. J. ராஜசேகரன் அவர்கள் 24.9.2012 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 28.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், கூடலூர் தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. S. நடராஜன் அவர்கள் 28.9.2012 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாநகர காவல், கட்டுப்பாட்டு அறை சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.சுப்பராயன் அவர்கள் 29.9.2012 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், மணிமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. சண்முகம் அவர்கள் 30.9.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, நிலை தடுமாறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து, மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், கம்மாபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C. ஜோசப் அவர்கள் 1.10.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. நடராஜன், சுப்பராயன், சண்முகம், மற்றும் முதல் நிலைக் காவலர் திரு. ராஜசேகரன், தலைமைக் காவலர் திரு. ஜோசப் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. நடராஜன் மற்றும் சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு.சுப்பராயன், திரு.சண்முகம், மற்றும் முதல் நிலைக் காவலர் திரு. J.ராஜசேகரன், மாரடைப்பால் காலமான தலைமைக் காவலர் திரு. ஜோசப் ஆகியோரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

2/2